# பொதுக்காலம் 29ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே, இன்று பொதுக்காலம் 29ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

இன்றைய நற்செய்தியில், "நேர்மையற்ற நடுவர்" என உவமையின் தலைப்பே அவரின் பண்பை நமக்குச் சொல்லி விடுகின்றது. நம்மிடையேயும், இன்று நேர்மையற்ற ஆட்சித்தலைவர்கள், அதிகாரிகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றனர். அவர்களை நாம் தேர்ந்தெடுத்தது போலத்தான் அக்காலத்திலும் நேர்மையற்ற அந்த நடுவரை தேர்ந்தெடுந்திருப்பார்கள் போலத் தோன்றுகிறது. திருமுழுக்கு யோவான் அரசன் ஏரோது, தன் சகோதரனின் மனைவியை வைத்திருப்பதை தவறென நேர்மையுடன், துணிவுடன் சுட்டிக் காட்டுகின்றார். நாமும் அத்ததைய நேர்மையான உள்ளத்துடன் வாழ முற்படுவோம்.

ஒதுக்கப்ட்டோரை, ஒடுக்கப்பட்டோரையே இறைவன் அதிகம் தேடிச் செல்கின்றார். அவர்களை வாழ்வில் ஏற்றம் காணச் செய்கின்றார். யூத சமூகத்தினரால் ஒதுக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட ஏழைக் கைம்பெண்ணுக்கு இறைவன் நீதி கிடைக்கச் செய்வதை இன்றைய நற்செய்தியில் காண்கின்றோம்.

அநீதியை என்றும் பொறுத்துக் கொள்ளாதவர் இறைவன். அதனால்தான், சமூகத்தால் புறந்தள்ளப்பட்ட, ஆதரவற்ற அந்தக் கைம்பெண்ணுக்கு நடுவர் நேர்மையற்றவராக இருந்தபோதிலும் நீதியை வழங்கச் செய்கின்றார். நேர்மையற்ற நடுவரின் மனதையே அசைய வைத்தது அந்த ஏழைக் கைம்பெண்ணின் விடாமுயற்சி. அப்பெண்ணின் அந்த அசைக்க முடியாத முயற்சி, நடுவரை அசைத்து விட்டது.

நாமும் நம் வாழ்வில் இறைவனிடத்தில் செபிக்கும்போதும், மற்ற காரியங்களிலும் முயற்சிகளை எடுக்கின்றோம். ஆனால், அதில் உறுதியாக இல்லாமல், விட்டுவிடுகின்றோம். அதனால்தான் நம்மால் எதையும் பெற முடிவதில்லை. பன்னிரெண்டு ஆண்டுகளாக தன்னிடமுள்ள நோய் நீங்க வேண்டுமென்ற அந்தப் பெரும்பாடுள்ள பெண் செபித்திருப்பாள். அதேபோல், தான் சுகம் பெற வேண்டுமென்று, முப்பத்தெட்டு ஆண்டுகளாக குளத்தில் இறக்கிவிட ஆளின்றி தவித்த உடல்நலமற்ற அந்த மனிதர் செபித்திருப்பார். அவர்கள் மனம் சோர்ந்து போகாமல், தளர்ந்திடாமல், விசுவாசத்துடன், விடாமுயற்சியுடன் செபித்ததால் அவர்கள் வேண்டுதல் நிறைவேறியது.

நாமும், நமக்கு கிடைக்க வேண்டியது இறைவனின் கரத்திலிருந்து வருவதற்கு காலதாமதமானால், நம்பிக்கை இழந்திடாமல், விடாமுயற்சியுடன் செபித்திட வேண்டும். அத்தகைய முயற்சி நிறைந்த மனதினைத் பெற்றிட ஆற்றல் வேண்டி, இணைவோம் இத்தெய்வீகத் திருப்பலியில்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. தாயும், தந்தையுமான இறைவா,

உம் பணிக்காய் நீர் தேர்ந்தெடுத்து, அர்ச்சித்த எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள், துறவறத்தார் அனைவரும், தங்கள் பணிவாழ்வில் உமதன்பு வாழ்வை, வார்த்தையாக இல்லாமல் வாழ்வாக பிரதிபலித்து, முன்மாதிரியான சாட்சிய வாழ்வு வாழ்ந்து, மக்களை நல்வழியில் வழிநடத்தி, இறையாட்சியை எங்கும் வளரச் செய்திட, தூய ஆவியின் ஆற்றலையும், வல்லமையையும் நிறைவாகப் பொழிந்து, காத்திட வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

2. அரணும், கோட்டையுமான இறைவா,

எங்கள் வாழ்வில் வரும் துன்பங்கள், துயரங்கள், சோதனைகளைக் கண்டு, மனம் சோர்ந்து, தளர்ந்து, வாழ்வை முடித்துக் கொள்ளும் கோழைத்தனமான, முட்டாள்தனமான முடிவுகளை எங்கள் மனதிலிருந்து அகற்றி, நீர் எங்களோடு என்றும் உடனிருக்கின்றீர், பயணிக்கின்றீர், எங்கள் வாழ்வை வளமாக்குவீர் என்ற ஆழமான விசுவாசத்தை, நம்பிக்கையை நாங்கள் பெற்று, வாழ்வின் பயணத்தை உம் கரம் பிடித்து நடந்திடக் கூடிய உறுதியான உள்ளத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

3. உலகின் ஒளியே இறைவா,

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். இந்த உலகம் காட்டும் மாயக் கவர்ச்சியான பணம், பதவி, புகழ், மது, மாது என்ற போதையில் தங்கள் வாழ்வை தொலைத்திடாது. தடம் புரண்டிடாது, உண்மை இறைவன் உம்மை விட்டு விலகி, பாவத்திலே வீழ்ந்திடாது, இருளின் ஆட்சிக்குரிய தவறான செயல்களிலிருந்து விடுபட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய செயல்களை உணர்ந்து, அதன் வழியில் தங்கள் வாழ்வைத் தொடர்ந்திடக் கூடிய தெளிவான மனதினைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

4. வாழ்வு வழங்கும் வள்ளலே இறைவா,

அன்று வயது முதிர்ந்த சாரா, அன்னா, எலிசபெத் இவர்களின் கண்ணீரின் வேண்டுதல்களை ஏறெடுத்து, அவர்களுக்கு மக்கட்பேற்றினை அளித்தீரே, இன்று திருமணமாகி பல ஆண்டுகள் கடந்து, குழந்தைச் செல்வத்திற்காக ஏங்கித் தவிக்கும் தம்பதியரின் வேண்டுதல்களை கண்ணோக்கிப் பாரும். அவர்களின் கண்ணீரை கண்ணுற்று, அவர்களுக்கு நல்ல மக்கட்பேற்றினை அளித்து, அவர்கள் அக்குழந்தையை உமக்கும், இச்சமூகத்திற்கும் உகந்தவர்களாக வளர்த்து ஆளாக்கிடக் கூடிய, பொறுப்புள்ள பெற்றோர்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

5. இரக்கத்தின் ஊற்றே இறைவா.

வறுமை, ஏழ்மையினால் துயருறும் மக்களுக்கு, அவர்களின் தேவைகளையறிந்து, உதவிடவும், எங்களிடம் இருப்பதை, இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழவும், விபத்து, ஆபத்துக்களில் சிக்கித் தவிப்பவர்களை கண்டும் காணாததுபோல், “நமக்கேன் வம்பு” என விலகிச் செல்லாமல், நல்ல சமாரியனைப் போல் உடனிருந்து உதவிடவும், அநீதிகளைக் கண்டு, தட்டிக் கேட்காமல், கோழைத்தனமாக வாழாது, தவற்றினைச் சுட்டிக் காட்டி, நீதியை நிலைநாட்டவும் கூடிய, துணிவு நிறைந்த உள்ளத்தை தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com